செ.வெ.எண்:-58/2020 நாள்:23.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# கொரோனா நோய் தொற்று ஏற்படாமல் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு தடை காலத்தில் முக்கிய நிகழ்வுகளுக்காக மட்டும் விலக்களித்து இணையதளத்தின் மூலம் அனுமதி சீட்டு வழங்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்படாமல் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு தடை காலத்தில், முன்னரே நிச்சயிக்கப்பட்ட திருமண நிகழ்ச்சி, இரத்தமுறை உறவினரின் இறுதிச் சடங்கு மற்றும் அவசர கால மருத்துவ சிகிச்சை ஆகிய காரணங்களுக்காக மட்டுமே விலக்களித்து அனுமதி சீட்டு வழங்கப்படுகிறது. வேறு எவ்வித காரணங்களுக்கும் அனுமதி சீட்டு (E-pass) வழங்கப்படமாட்டாது.

அனுமதி சீட்டு (pass) பெறுவதற்கு உரிய ஆவணங்களை (திருமண அழைப்பிதழ், கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட இறப்பு குறித்த சான்று மற்றும் மருத்துவ அலுவலரின் சான்று) பதிவேற்றம் (Upload) செய்து, கீழ்காணும் இரண்டில் ஏதேனும் ஒரு வழிமுறைகளின்படி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. https://epasskki.in என்ற இணையதளம் மூலம் பெறும்முறை:
    1. https://epasskki.in/ என்ற இணைப்பிற்கு செல்ல வேண்டும்.
    2. இணைப்பினைக் கிளிக் செய்து உங்களது கைபேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும்.
    3. உங்களது கைபேசியில் வரப்பெறும் ஒருமுறை ரகசிய குறியீட்டு எண்ணை (OTP) பதிவு செய்ய வேண்டும்.
    4. விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்.
    5. ஆதார ஆவணங்களை உள்ளீடு செய்ய வேண்டும்.
    6. பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.
2. dindigul.nic.in என்ற இணையதளத்தில் அனுமதி சீட்டு link id click செய்து உரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளலாம்.

சரியான காரணங்கள் குறிப்பிடாமலும், உரிய ஆவணங்கள் இல்லாமலும் அனுமதி கோரிய விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் மீண்டும், மீண்டும் விண்ணப்பம் செய்தது தெரியவந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுமதி சீட்டு (pass) இணையதளத்தின் வழி மட்டுமே வழங்கப்படுவதால் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வருவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**